ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1784/3 - 2012 නොවැම්බර් 12 වැනි සඳුදා - 2012.11.12
*1784/3 ஆம் இலக்கம் – 2012 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 12 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) – மாகாண சபைகள்

## ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும்

எனது இல. : *01/10/03/04.*

**ஊவா மாகாண மாகாண சபை**

*ஊவா மாகாண ஆளுநரினால் செய்யப்படும் நியமனங்கள்*

*ஊவா மாகாணத்தின் ஆளுநர் கௌரவ சீ. நந்த மெத்தியு அவர்களால் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள நியமனங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பதனை இதன் மூலம் அறிவிக்கின்றேன் :-*

1. *பண்டாரவளை மாநகர சபையின் மாநகர சபை ஆணையாளராக சேவையாற்றும் திரு. டப்ளிவ். ரண்தெணிய அவர்கள் 2012.10.01 ஆம் திகதி முதல் 2012.12.19 ஆம் திகதி வரை இலங்கை நிருவாக சேவையின் உத்தியோகத்தர்களுக்கான சேவை ஆரம்ப பயிற்சியில் கலந்து கொள்வதால் 2012.10.01 ஆம் திகதி முதல் அவர் மீள சேவைக்கு திரும்பும் வரை, இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. எச். எம். ஜே. ஹேரத் அவர்கள் தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக பண்டாரவளை மாநகர சபையின் மாநகர சபை ஆணையாளராக பதிற்கடமை ஆற்றுவதற்கு.*

2. *இலங்கை நிருவாக சேவையின் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் திருமதி குசும் பதிராஜ அவர்கள், 2012.10.01 ஆம் திகதி முதல் நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்படும் வரை அல்லது 2012.12.31 ஆம் திகதி ஆகியவற்றில் முன்தோன்றும் திகதி வரையில் மட்டும் ஊவா மாகாண சுகாதாரம், சுதேச வைத்தியம், நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு விவகாரம் மற்றும் மகளிர் விவகாரம் தொடர்பான அமைச்சின் உதவிச்செயலாளராக ஒப்பந்த அடிப்படையில் மீள் பணி ஆற்றுவதற்கு.*

3. *ஊவா மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திரு. எம். பீ. என். எம். விக்ரமசிங்க அவர்கள் 2012.10.07 ஆம் திகதி முதல் 2012.10.11 ஆம் திகதி வரை வெளிநாடு செல்வதால், 2012.10.07 ஆம் திகதி முதல் அவர் மீள தீவிற்கு திரும்பும் வரை, உதவி உள்ளூராட்சி ஆணையாளர் பதவியின் பணிகளை ஆற்றும் திரு. ஆர். எம். ஜயவர்தன அவர்கள், தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக ஊவா மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பதவியின் பணிகளை ஆற்றுவதற்கு.*

4. *ஊவா மாகாண பிரதி தலைமைச் செயளாலர் (திட்டமிடல்) திரு. சின்தக ஹெட்டிஆரச்சி அவர்கள் 2012.10.15 ஆம் திகதி முதல் 2012.10.21 ஆம் திகதி வரை வெளிநாடு செல்வதால், 2012.10.15 ஆம் திகதி முதல் அவர் மீள தீவிற்கு திரும்பும் வரை, பணிப்பாளர் (திட்டமிடல்) திரு. எம். எம். ஆனந்த விஜித குமார அவர்கள் தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக ஊவா மாகாண பிரதி தலைமைச் செயளாலராக (திட்டமிடல்) பதிற்கடமை ஆற்றுவதற்கு.*

5. *ஊவா மாகாண சுகாதரம், சுதேச வைத்தியம், நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு விவகாரம் தொடர்பான அமைச்சின் செயலாளர் திருமதி ஜீ. ஏ. எம். எஸ். பீ. அபன்வல அவர்கள் 2012.10.15 ஆம் திகதி முதல் 2012.10.21 ஆம் திகதி வரை வெளிநாடு செல்வதால், 2012.10.15 ஆம் திகதி முதல் அவர் மீள தீவிற்கு திரும்பும் வரை, இலங்கை நிருவாக சேவையின் விஷேட வகுப்பைச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. எம். ஏ. பீ. தயாசெனரத் அவர்கள், தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக ஊவா மாகாண சுகாதாரம், சுதேச வைத்தியம், நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு விவகாரம் தொடர்பான அமைச்சின் செயலாளராக பதிற்கடமையாற்ற.*

6. ஊவா மாகாண சபையின் தலைமைச் செயலாளர் திரு. பீ. பீ. அமரசேகர அவர்கள் 2012.10.15 ஆந் திகதி முதல் 2012.10.21 ஆந் திகதி வரை வெளிநாடு செல்வதால், 2012.10.15 ஆந் திகதி முதல் அவர் மீள தீவிற்கு திரும்பும் வரை, இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் டப்ளிவ். எம். எம். ஜீ. அபேசிங்க பண்டா அவர்கள் தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக ஊவா மாகாண தலைமைச் செயலாளராக பதிற்கடமை ஆற்றுவதற்கு.

7. ஊவா மாகாண கல்வி பணிப்பாளராக சேவையாற்றும் திரு. ஆர். எம். பீ. ரத்னாயக அவர்கள் 2012.10.14 ஆந் திகதி முதல் 2012.10.28 ஆந் திகதி வரை வெளிநாடு செல்வதால், 2012.10.14 ஆந் திகதி முதல் அவர் மீள தீவிற்கு திரும்பும் வரை, இலங்கை கல்வி நிருவாக சேவையைச் சேர்ந்த திரு. ஆர். எம். ஆனந்த அவர்கள் தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக ஊவா மாகாண கல்வி பணிப்பாளர் பதவியின் பணிகளை ஆற்றுவதற்கு.

8. ஊவா மாகாண நிதி, திட்டமிடல், சட்டமும் சமாதானமும், கல்வி, உள்ளூராட்சி மன்றங்கள், கலாசார அலுவல்கள், போக்குவரத்து, காணி, நீர்ப்பாசனம், பொருளாதார மேம்பாடு, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் நிர்மானத்துறை தொடர்பான அமைச்சின் செயலாளர் திரு. எல். எல். அனில் விஜேசிரி அவர்கள் 2012.10.14 ஆம் திகதி முதல் 2012.10.27 ஆம் திகதி வரை வெளிநாடு செல்வதால், 2012.10.14 ஆம் திகதி முதல் அவர் மீள தீவிற்கு திரும்பும் வரை, இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. குணதாச சமரசிங்க அவர்கள், தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக, ஊவா மாகாண நிதி, திட்டமிடல், சட்டமும் சமாதானமும், கல்வி, உள்ளூராட்சி மன்றங்கள், கலாசார அலுவல்கள், போக்குவரத்து, காணி, நீர்ப்பாசனம், பொருளாதார மேம்பாடு, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் நிர்மானத்துறை தொடர்பான அமைச்சின் செயலாளராக பதிற்கடமை ஆற்றுவதற்கு.

9. மொனராகலை பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளராக சேவையாற்றும் வைத்தியர் திரு. பீ. டி. கே. அதிகாரி அவர்கள் 2012.10.14 ஆம் திகதி முதல் 2012.10.21 ஆம் திகதி வரை வெளிநாடு செல்வதால், 2012.10.14 ஆம் திகதி முதல் அவர் மீள தீவிற்கு திரும்பும் வரை, வைத்தியர் திரு. யூ. எஸ். பீ. உடுனுவர அவர்கள் தனது நிரந்தர பதவிக்கு மேலதிகமாக, மொனராகலை பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் பதவியின் பணிகளை ஆற்றுவதற்கு.

10. இலங்கை கல்வி நிருவாக சேவையின் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் திரு. டி. எம். கிரிபண்டா அவர்கள், 2012.09.29 ஆம் திகதி முதல் பிபிலை வலயக்கல்வி காரியாலயத்திற்கு கல்விப் பணிப்பாளராக நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்படும் வரை அல்லது 2012.12.31 ஆம் திகதி ஆகியவற்றில் முன்தோன்றும் திகதி வரையில் மட்டும் பிபிலை வலயக் கல்வி காரியாலயத்தின் கல்விப் பணிப்பாளராக ஒப்பந்த அடிப்படையில் மீள் பணி ஆற்றுவதற்கு,

எச். எம். சோமதிலக,
ஆளுநரின் செயலாளர்,
ஊவா மாகாணம்.

ஆளுநரின் அலுவலகம்,
ஊவா மாகாணம்,
இராஜ வீதி,
பதுளை.

11- 981

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.